மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். அமைச்சர் அவர்களிடம் தகவல் இருக்கும்படியான கேள்விகளைக் கேளுங்கள்.

ஆவலூர் கிராமத்தில் உள்ள பள்ளிவாசல்.

*399 வினா. திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1977 ஏப்ரல் மாதத்தில் அரக்கோணம் தாலூகா, ஆவலூர் கிராமத்தில் உள்ள இஸ்லாமிய பள்ளிவாசலில் முத்தவல்லியால் 40 ஏக்கரில் உள்ள வருமானம் மோசடி செய்யப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) ஆவலூர் கிராமத்திலுள்ள இஸ்லாமிய பள்ளிவாசலின் சொத்துக்களுக்கான வரவு-செலவுக் கணக்குகளைச் சரியாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளவில்லை என்பதற்காக ஆவலூர் பள்ளி வாசலின் முத்தவல்லி தமிழ்நாடு வக்ஃப் குழுவால் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வக்ஃப் குழுவின் ஆணையை எதிர்த்து பதவி நீக்கம் செய்யப்பட்ட முத்தவல்லி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். உயர்நீதி மன்றம், வக்ஃப் குழுவின் ஆணையைத் தற்காலிகமாக தடை செய்துள்ளது. வழக்கின் இறுதி முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இந்த நிலங்கள் பகுதிக்குச் சொந்தமான நிலங்கள். ஒரு சிலர் அந்த நிலங்களை ஆக்கிரமணம் செய்து கைப்பற்றி கைவசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்து வருகிற வருமானம் சரிவர அந்தப் பள்ளி வாசலுக்குப் போய்ச் சேரவில்லை என்பதுதான் என் கேள்வியில் உள்ள கோரிக்கை. நாள் தள்ளுவதற்காகத்தான் அவர்கள் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்களே தவிர உள்ளபடியே அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை, அந்த ஸ்டேயை வக்கேட் செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள முயற்சி என்ன ?

(முற்பகல் 10.10)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் சட்டம் 43-வது பிரிவில் வக்ஃப் சொத்துக்களைப் பராமரிப்பதில் தவறுகள் ஏற்படுமானுல் சொத்துக்களைப் பராமரித்துக் கொண்டிருக்கின்ற தலைவரை மாற்றுவதற்கான அதிகாரம் இருக்கிறது, ஆயினும் ஆவலூர் பள்ளி வாசலுக்குச் சொந்தமான விலைமதிப்பற்ற சொத்துக்களைப் பள்ளி வாசலின் முத்தவல்லி தவருக நிர்வாகம் செய்ததால் அந்த முத்தவல்லியை பதவியைவிட்டு நீக்கவும், ஐந்து பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றை அமைக்கவும் வக்ஃபு குழு முடிவு செய்தது. அதன் மீது இப்போது உயர்நீதிமன்றத்தில் தற்காலிக தடை வாங்கியிருக்கிருர்கள். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பின்னர் இதன் மீது அதாவது பள்ளிவாசலின் சொத்துக்களின் மீது வக்ஃப் வாரியம் சீரானநடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வி—எண் 400

(திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் எழுந்திருந்தார்........)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் உங்களைப்போன்றுதான் யூசப் அவர்களும் எழுந்திருந்தார். அவரையும் உட்காரச் சொல்லிவிட்டேன். உட்கார்ந்து விட்டார். நீங்களும் தயவு செய்து உட்காருங்கள்...... நேரம் அதிகமாகிறது..... அடுத்த கேள்வி..... திரு. ஏ. கே. அரங்கநாதன்.......

திரு. எம். ஏ. லத்தீப்: * * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே சுமுகமாக நடைபெற்றுக்கொண்டு வந்த கேள்வி நேரத்தில், சற்றும் எதிர்பாராத விதமாக சூடு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்கு இந்தக் கேள்வியில் ஒரு இண்டரஸ்ட், ஒரு தொடர்பு என்று கேள்விகேட்க விரும்பினுலும் பேரவைத் தலைவர் அவர்கள் அடுத்த கேள்வியைக்குறிப்பிட்டு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களைப் பதிலிறுக்க அழைத்துவிட்டக் காரணத்தினுல் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1978 மார்ச் 4] [மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், நேரம் ஆகிக் கொண்டே போகிறது. கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்ற நிலை மாறி, அதற்கு மேலாகவே ஆகிற காரணத்திஞல், அடுத்தக் கேள்வி என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசும்போது* * * * * என்று சொன்ன வார்த்தைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதை நானே சொல்ல வேண்டுமென்று இருந்தேன். கேள்வி நேரம் முடிந்த பிறகு சொல்கிறேன். முன்வரிசையிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர்கள் பேரவைத் தலைவரோடு பொறுப்புடன் ஒத்துழைக்க வேண்டும். ஆனுல் லத்தீப் அவர்கள் கருதுவதுபோல், அவர்கள் எழுந்திருக்கும் போதெல்லாம் எல்லாக் கேள்விகளுக்கும் அவர் அழைக்கப்பட வேண்டுமென்பது கட்டாயமில்லை.

அது மாத்திரமல்ல. ஒன்று கூற விரும்புகிறேன். கட்சிகளிலே இருக்கின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலே, இனிமேல் நேரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, இதற்குத் தகுந்தபடி கூப்பிடுகிறேன். ஆகவே, தயவுசெய்து இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலை, அரியூர்.

* 400 வினு—திரு. அ. கு. அரங்கநாதன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் அருகிலுள்ள அரியூர் கூட்டுறவு நூற்பு ஆலையை மேலும் விரிவு படுத்துவதற்கான திட்டமேதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : வேலூர் அருகில் அரியூரிலுள்ள வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை 13,824 கதிர்களிலிருந்து 25,056 கதிர்களுள்ள ஆலையாக அண்மையில் விரிவு படுத்தப்பட்டுள்ளது. மேலும் விரிவுபடுத்துவதற்கான திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.